2024 ஜூன் 29] [திரு. ஐ.பி. செந்தில்குமார்]

இழக்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது. எனவே, அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பல்வேறு திட்டங்களை உருவாக்கி, பாதுகாத்துவரும் நம்முடைய மக்கள் தலைவரின் அரசு, எங்களது பழனிவாழ் மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க வழிவகை செய்வதன் அவசியம் குறித்து அரசின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன். நன்றி.

(உ) Cotton Corporation of India நிறுவனத்திடம் உள்ள பஞ்சை நூற்பாலைகளுக்கு மட்டும் வழங்குவது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.*

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கிற* Cotton Corporation of India, *அவர்களிடத்தில் இருக்கிற பஞ்சை ஜூலை முதல் வாரத்திலே வியாபாரிகளுக்கு விற்பதற்கான ஏற்பாடுகள் செய்து கொண்டிருப்பதாக அறிகிறோம். அது நடந்துவிட்டால், தமிழ்நாட்டில் இருக்கிற நூற்பாலைகள் அத்தனையையும் மூடுவதைத் தவிர, வேறு வழி கிடையாது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக ஒன்றிய அரசின் கவனத்திற்கு இந்தப் பிரச்சினையை எடுத்துச்சென்று, அதற்கான தீர்வைக் காண வேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும்* Cotton Corporation of India, *வியாபாரிகளுக்கு அதை விற்றுவிடக் கூடாது; நூற்பாலைகளுக்குத்தான் பஞ்சை கொடுக்க வேண்டும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் அரசின் கவனத்தை ஈர்த்து அமருகிறேன்.*

(ஊ) குளச்சல் தொகுதி, பழத்தோட்டம் கிராமம், தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் என்ன இருக்கிறதோ அதை மட்டும் சொல்லுங்கள்.*

[2024 ஜூன் 29

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாத நிலை இருக்கிறது. எங்கள் மாவட்டத்திற்கு அருகாமையில் இருக்கிற திருவனந்தபுரத்தில் IT park எல்லாம் இருக்கிறது. எங்கள் மாவட்டத்தில் இரப்பர் production இருக்கிறது. ஆனால், அதற்குரிய கம்பெனிகள் இல்லை. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரை, எந்தக் கம்பெனியும் இல்லை. எனவே, IT park வேண்டும். என்னுடைய தொகுதியில் கப்பியறை பஞ்சாயத்தில் பழத்தோட்டம் என்ற கிராமம் உள்ளது. அது சிறிய பகுதியாக இருந்தாலும், அங்கு IT park அமைத்துக் கொடுத்தால், நன்றாக இருக்கும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(எ) மாஞ்சோலை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் மறுவாழ்வு, சிறப்புக் குழு அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.

முற்பகல் 10–50

திரு. ம. சிந்தனை செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாஞ்சோலை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் நிலையை நாம் எல்லோரும் அறிவோம். குத்தகைக் காலம் முடிவடைந்ததையொட்டி, அந்த நிறுவனம் வெளியேறக்கூடிய ஒரு சூழ்நிலையில் தொழிலாளர்களும், அங்கே குடியிருந்தவர்களும் வெளியேற்றப்படக்கூடிய நிலையில், நீதிமன்றம் பிறப்பித்திருக்கிற ஓர் இடைக்கால உத்தரவால் அவர்கள் கொஞ்சம் ஆறுதல் அடைந்திருக்கிறார்கள். நீதிமன்றத்தினுடைய கருணைப் பார்வையைவிட, உன்னதமான கருணைப் பார்வை கொண்ட நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாஞ்சோலை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களை மறுவாழ்வு செய்திட சுற்றுலாத் துறை, ஆதி திராவிடர் நலத் துறை மற்றும் வருவாய்த் துறை ஆகிய துறைகளைச் சார்ந்த அதிகாரிகளைக் கொண்டு ஒரு சிறப்புக் குழுவை அமைத்து, அவர்களின் மறுவாழ்வுக்கான ஆலோசனைகளை அரசுக்குப் பரிந்துரை செய்யும் வகையில் அமைத்திட வேண்டுமென அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.